# DEPOSITION OF WITNESS

# CHAPTER CODE OF CIVIL PROCEDURE

# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

## <u>OS . No. 246/2021</u>

Deposition of Witness : PW1

Name - **கனிஷ்கர்** Father's Name - **ஜோதிகணேசன்**

Village\City - Taluk-

Caste - Calling -

Religion - Age-

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2023.

**(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்**

**<u>பி.வா.கு.வி.:</u>**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | ஓ.எஸ்.37/2009 வழக்கில் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை படித்து தெரிந்து கொண்டீர்களா என்று கேட்டால்? |
| பதில் | : | படித்து பார்த்தேன், தெரிந்து கொண்டேன். |
| கேள்வி | : | 37/2009 வழக்கானது பிரதிவாதியின் தாயார் வெள்ளைத்தாயம்மாள் என்பவர் உங்களது தாத்தா விசுவாதனுக்கு இடையில் 25.06.2006 அன்று ஏற்பட்ட கிரைய அக்ரிமெண்ட்டை செயல்படுத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்று சொன்னால்? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | மேற்படி வழக்கில் வெள்ளைத்தாயம்மாள் தாவா சொத்தின் சுவாதீனம் அவரிடம் உள்ளதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்? |
| பதில் | : | அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. |
| கேள்வி | : | மேற்படி வழக்கில் உங்கள் தாத்தா விசுவதநாதன் எழுதிக்கொடுத்த பிரம்சுரி நோட்டும் இதர கிரைய அக்ரிமெண்ட் ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | நான் அந்த மாதிரி ஆவணத்தை பார்க்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | | .2. |
| கேள்வி | : | மேற்படி வழக்கில் விசுநாதன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பார்த்தீர்களா என்றாலும், அதில் விசுவநாதன் தாவா சொத்து சம்பந்தமாக வேறு நபர்களுடன் கிரைய அக்ரிமெண்ட் செய்துள்ளதாக சொல்லப்பட்டது என்று சொன்னாலும்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | தாத்தா விசுவநாதன் வேறு நபர்களுடன் செய்து கொண்ட கிரைய அக்ரிமெண்ட் எல்லாவற்றையும் வெள்ளைத்தாயம்மாள் திரும்பி பெற்றுக் கொண்டதால் தான் விசுவநாதனுக்கும் வெள்ளைத்தாயம்மாள் இருவருக்குமிடையே தாவா சொத்து சம்பந்தமாக கிரைய அக்ரிமெண்ட் ஏற்பட்டது என்று சொன்னால்? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | விசுவநாதன் மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தனக்கும் வெள்ளைத்தாயம்மாள் இருவக்குமிடையில் தாவா சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட கிரைய அக்ரிமெண்ட் ஆனது உண்மை என்று ஒப்புக் கொண்டுள்ளார் என்று சொன்னால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | (இனி ஓ.எஸ்.நம்பர்.37/2009 மேற்படி வழக்கு என்று அழைக்கப்படும்) மேற்படி வழக்கில் விசுவநாதன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 6ல் 19.06.2003ம் தேதியன்று தாவா சொத்தின் 1 வழக்கைப் பொறுத்து உத்தமபாளையம் எஸ்.ஆர்.ஓ.1678/2003 என்ற எண்ணுள்ள பதிவு எக்ரிமெண்ட் ஏற்பட்டதாகவும், கிரைய அக்ரிமெண்ட் தொகையான ரூ.3,75,000/-ஐ ரூ.3,50,000/-ஐ செல்வம் என்பவரிடம் பெற்றுக் கொண்டு அவரிடம் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்து விட்டதாக சொல்லியுள்ளார் என்றால்? |

இருதரப்பினரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.06.2023 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2023.06.09 18:06:03 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
09.06.2023.